திரு. ஏ. சுப்பிரமணியம் : சிகரெட் பிடிப்பதால் லங் கான்சர் வரும் என்று அமெரிக்காவில் சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை செய்யும் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அப்படி சிகரெட் பிடிப்பதால் உடல் நலம் கெடுகின்ற நிலையில் இருந்து இந்த மாநிலத்தின் மக்களைப் பாதுகாக்கும் வகையில் சிகரெட் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் எண்ணத்தைக் கைவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி ஒரு தகவல் நானும் கேள்விப்பட்டேன். குடிப்பதால் ஏற்படும் கெடுதல் வேறு, அதனை உற்பத்தி செய்வது வேறு. நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தி செய்தால் பணமாவது நமக்குத் தங்கும். குடிப்பது வேறு, தொழிற்சாலை வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்வது வேறு.

THIRU K. S. KOTANDARAMIAH : Sir, Virginia tobacco of the highest quality which is required for the manufacture of cigarettes is grown in Hosur Taluk of Dharmapuri District Recently the Director of Tobacco who came to Hosur has also stated that Hosur taluk has a bright future in this regard. Further, a tobacco research-sale unit has been started in Hosur. Considering these advantageous factors that Hosur taluk commands, will the hon. Minister for Industries give preference to Hosur taluk in the matter of starting a cigarette factory?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கருத்துக்களை ஏற்றுத்தான் முதலிலேயே சொன்னேன். அதுபற்றிப் பரிசீலனை செய்யப் படுகிறது.

மாநில கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 102 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநில கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகாரப்பற்றற்றவர்களுக்குப் பதிலாக அதிகாரிகளை நிர்வாகிகளாக போட்டிருக்கிறார்களா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) அதிகாரப் பற்றற்றவர்கள் சென்னை மாநில கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையக் கூட்டுறவுச் சங்கத்தை சரிவர நிர்வகிக்கவில்லை. அவர்களை மாற்றியமைக்க தக்க தகுதியுடையவர்களும் முன்வரவில்லை. அந்த சங்கத்தின் நஷ்டம் ரூ. 4 லட்சத்திற்கு மேல் போய்விட்டது. சங்கத்தை சீர்படுத்த அதிகாரிகளை நிர்வாகிகளாக அரசு நியமித்திருக்கிறது. இது ஒரு இடைக்கால அமைப்பு. நிலைமை சீர்படுத்தப்பட்ட பின் அதிகாரப்பற்றற்றவர்களும் நிர்வாகிகளாக நியமிக்கப்படுவார்கள்.

1971 ஜூலை 1]

திரு. கே. ஏ. வகாப் : அரசு தனியாக கைவினை விற்பனைப் பொருள்கள் கூடம் நடத்துவதால் கூட்டுறவுத் துறையில் நடத்தப் பெறும் இந்த விற்பனை நிலையம் நஷ்டத்தில் நடக்கிறது என்பதை அரசு அறியுமா? இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவுத் துறையில் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழக அரசைப் பொறுத்த வரை மாநில அளவில் இது ஒன்றைத் தவிர வேறு அமைப்பு கிடையாது. மாவட்ட அளவில் டிப்பார்ட்மெண்டல் எம்போரியம் வைத்திருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற பொருள்களை விற்பதில் தலைமைச் சங்கம் ஈடுபட்டு செயல்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். கனம் அங்கத்தினர் சொன்னதுபோல் இதிலுள்ள சிரமங்களைப் பரிசீலித்து ஹாண்டிகிராப்ட்ஸ் பொறுத்த அளவில் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் என்ன மாற்று முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று ஆராய்ந்து வருகிறது.

திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*103 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள சேல்ஸ் சொசைட்டி எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?

(இ) 15—6—1967-ம் தேதி வரை இந்த சொசைட்டி எத்தனை முறைகள் தணிக்கையும் சோதனையும் (Audit and Inspection) செய்யப்பட்டுள்ளது?

(உ) இந்தச் சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1921-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

(இ) தொடங்கப்பட்ட நாள் முதல் 15—6—1967 வரை இக்கழகம் 46 முறை தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கழகத்தைப் பார்வையிடும் பணி குறித்த காலத்திற்கு ஒரு முறை செய்யப்பட்டதா என்று தெரியவில்லை.

(உ) ஆம்.

திரு. சு. துரைசாமி : தலைவாவர்களே, மேற்படி கூட்டுறவுச் சங்கத்திலே ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் வரையில் பொது மக்களின் பணத்தை எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பணம் இதுவரையில் வசூல் செய்யப்படவில்லையே. அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.